தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் **I,II**

தரம் 9 இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019 2.30 மணித்தியாலங்கள்

## பகுதி-1

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **பொருத்தமான விடையை தெரிவுசெய்து அடிக்கோடு இடுக.**

1. கணினியின் தந்தை என அழைக்கப்படுபவர்?

 1. ஜோசப் ஜக்குவாட் 2. கோப்பிரட் வில்லியம்

 3. சாள்ஸ் பபேஜ் 4. அடா ஒகஸ்ரா லொவலசே

2. மென்பொருட்களை வடிவமைத்தலும் உருவாக்கலும் என்ற பணிக்கு பொருத்தமான பயனரை குறிப்பது?

 1. செய்நிரலர் 2. கணினி பிரயோக உதவியாளர்

 3. மென் பொறியியலாளர் 4. தொழினுட்பவியலாளர்

3. பின்வருவனவற்றில் பணி செயன்முறைக்கு உதாரணமாக அமையாதது எது?

 1.DOS 2.Linux 3.Windows 4. Intel

4. கணினியின் மூளையாக கருதப்படும் அலகு எது?

 1. நினைவக அலகு 2. மத்திய செயற்பாட்டு அலகு

 3. வெளியீட்டு அலகு 4. உள்ளீட்டு அலகு

5. உள்ளீட்டு சாதனமாகவும் வெளியீட்டு சாதனமாகவும் கருதிக் கொள்ள முடிவது பின்வருவனவற்றுள் எது?

 1. அச்சுப்பொறி, கணினிதிரை 2. தொடுதிரை, சுட்டி

 3. இறுவட்டு, தொடுதிரை 4. தொடுதிரை, கணினிதிரை

6. சேமிப்பு சாதனம் அல்லாதது

 1. வன்வட்டு 2. பளிச்சீட்டு செலுத்தி

 3. நினைவக அட்டை 4. அச்சுப்பொறி

7. 1024 KB க்கு சமனான பெறுமானம்?

 1.1MB 2.1TB 3.1GB 4. 8Bit

8. கணினியில் நடைபெறும் அட்சரகணித செயற்பாடுகளுக்கு பயன்படுவது எது?

 1. கட்டுப்பாட்டு அலகு 2. எண்கணித மற்றும் தர்க்க அலகு

 3. பதிவகங்கள் 4. உள்ளீட்டு, வெளியீட்டு அலகு



kalvi.lk

9. ஆர்டினோ (Ardunio) பலகைக்கு மின் வழங்க பயன்படும் பகுதி எது?

1.வலு ஊசி (Power pin) 2. ஒப்புவமை ஊசி (Analog pin) 3. Mini USB 4. DC மின் வழங்கல்

10.நிரந்தரமான இடத்தில் வைத்துப் பயன்படுத்தப்படும் கணினி எது?

1. மடிக் கணினி 2. வரைப்பட்டிகைக் கணினி 3. கையேட்டுக் கணினி 4. சேவையகக் கணினி

11.CPU என்பது

1. Control Processing Unit 2. Central Processing Unit

3. Core Processing Unit 4. Computer Project Unit

12. காட்சித்திரைகளின் (Monitor) வகைகள் அல்லாதது?

1. கதோட்டு கதிர் குழாய் (CRT) 3. தொடு திரை (Touch Screen)
2. திரவப்பளிங்குக் காட்சியகம் (LCD) 4. ஒளிகாலும் இருவாயி (LED)

13. முதன்மை நினைவகத்தின் (RAM) கொள்திறன் எவ் அலகினால் எடுத்துரைக்கப்படும்?
1. GB 2. KB 3. MHz 4. M

14. USB என்பதன் விவாக்கம்?
1.Universal Serial Bus 2. Universal Serial Board
3. Universal Secure Board 4. Unit Serial Bus

15.விரிதாள் மென்பொருளில் நிரலும் (Coloum) நிரையும் (Row) இடைவெட்டும் இடம் எப் பெயரால் அழைக்கப்படும்?
1. கலவீச்சு(Cell Range) 3. பணித்தால் (Worksheet)
2. கலம் (Cell) 4. பணிநூல் (Workbook)

Education கல்வி අධ්‍යාපන

- கீழே தரப்பட்ட பட்டியலிலுள்ள சொற்களை மாத்திரம் பயன்படுத்தி 16 – 20 வரையான வினாக்களுக்கு விடை தருக?

| |
|---|
| அச்சுப் பொறி, Wifi, பளிச்சீட்டு செலுத்தி, தாய்ப்பலகை, சமதளப்படுகை வருடிகள் |

16. கணினியில் காணப்படும் துறைகள் ....................................உடன் இணைக்கப்பட்டிருக்கும்.

17. வெளியீட்டு சாதனமாக அமைவது ........................................................................ ஆகும்

18. தேக்க சாதனமாக அமைவது ........................................................................ ஆகும்

19. அச்சிட்ட படங்களை எழுத்துக்களை கணனிப்படுத்த பயன்படுத்தும் சாதனம்.................................. ஆகும்

**20.** வடமில்லாத வலையமைப்பு தொடர்புகளை உருவாக்குவதற்கு ................ வசதி இருத்தல் வேண்டும்

**(40புள்ளிகள் )**




kalvi.lk

## பகுதி 2

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1)

1) கீழே தரப்பட்டுள்ள கணினியின் புறச்சாதனங்களின் பெயர்களை குறிப்பிடுக.




1. …………………………………………
2. …………………………………………
3. …………………………………………
4. …………………………………………
5. …………………………………………


Education கல்வி අධ්‍යාපන

2. கணினியின் புறச் சாதனங்களின் 2 வகைகளை குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றிற்கும் ஒரு உதாரணம் தருக?

3. வன்வட்டின் கொள்திறனை அளப்பதற்கு பயன்படுத்தப்படும் அலகுயாது?

2)

1) கணினியின் அடிப்படைத் தொழிற்பாட்டைக் குறிக்கும் கீழுள்ள வரைபடத்தை பூரணப்படுத்துக.




2) தனியாள் தேவைகளுக்கேற்ப கொள்வனவு செய்யக்கூடிய கணினி வகைகள் 2 தருக?

3) கணினி ஒன்றை கொள்வனவு செய்யும்போது கருத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் 2 தருக?



kalvi.lk

2. நீட் எனும் நிறுவனம் ஒன்றில் A,B,C என்ற 3 குழுக்கள் காணப்படுகின்றது அங்கு பணிபுரிகின்ற ஊழியர்களை அந் நிறுவனம் குழுக்களாக பிரிப்பதற்கு உத்தேசித்துள்ளது அதனடிப்படையில் ஊழியர்களது இலக்கமானது 3 இனால் வகுத்து பெறப்படும் மீதியில் இருந்து குழுக்கள் தீர்மானிக்கப்படும்

| மீதி | குழு |
|---|---|
| 0 | A |
| 1 | B |
| 2 | C |

நீட் நிறுவனத்தின் ஊழியர் தெரிவுக்கான பாய்ச்சல் கோட்டு வரைபடத்தினை வரைக?

.................................................................................................................................

.................................................................................................................................

6)

1. நுண்கட்டுப்படுத்திகளின் உள்ளடக்கம் மூன்று தருக?
2. உணரிகள், நுண்கட்டுப்படுத்திகள் பயன்படுத்தப்படும் உபகரணங்களுக்கு 3 உதாரணம் தருக?
3. நுண்கட்டுப்படுத்தியுடன் இணைக்கக் கூடிய வேறு சாதனங்கள் இரண்டு தருக?
4. நுண்கட்டுப்படுத்தியில் (micro controller) பயன்படும் பலகைகள் 2 தருக?

(60 புள்ளிகள் )



kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page